0068

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**கல்விப்பீடம்**
**கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**
**இறுதிப் பரீட்சை**
**STP9618– கல்வியில் முகாமைத்துவம்**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**
**திகதி:- 07.02.2026** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30**

**எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக.**

1.

**i.** அடிப்படை முகாமைத்துவச் செயன்முறைகளின் பிரதான கூறுகளை உங்களுடைய பாடசாலை அல்லது கல்வி நிறுவனத்துடன் தொடர்புபட்ட உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

**ii.** முகாமைத்துவத்தின் அடிப்படை மட்டங்கள் **மூன்றினையும் (03)** ஒழுக்கமைப்பின் சிறப்பான செயற்படுத்தலுக்கு அவ்வொவ்வொரு மட்டத்திற்கும் அத்தியவாசியத் தேவைப்படும் திறன்களையும் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** ஒரு பாடசாலையின் அதிபர் அல்லது ஒரு கல்வி நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில், பாடசாலையின் அல்லது நிறுவனத்தின் செயலாற்றுகையை முன்னேற்றுவதற்கு விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாட்டின் தத்துவங்களை எவ்வாறு பிரயோகிப்பீர்கள் எனச் சுருக்கமாக கலந்துரையாடுக. **(10 புள்ளிகள்)**

2. "வலுவூட்டப்பட்ட தலைவர்கள் நம்பிக்கையை ஊக்குவித்து, ஊழியர்களை ஈடுபாடு கொள்ளச் செய்தல், முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் திறமைகளை விருத்தி செய்தல் என்பவற்றின் ஊடாக செயலாற்றுகையை மேம்படுத்துவதானது விசுவாசத்திற்கும் மீள்தன்மைக்கும் வழிவகுக்கிறது."

**i.** ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்றின் துணையுடன் தலைமைத்துவம் எனும் எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

**ii.** Bernard Bass என்பவரால் முன்வைக்கப்பட்ட நிலைமாற்று தலைமைத்துவத்தின் பிரதான குணப்பண்புகள் **நான்கினைச் (04)** சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** 21ஆம் நூற்றாண்டின் கல்வித் தலைவர்கள் புத்தாக்கத்தினை படைத்தல் முக்கியமானது. புத்தாக்கத்தினையும் ஒழுங்கமைப்பின் செயலாற்றுகையையும் உயர்த்துவதில் நிலைமாற்று தலைமைத்துவத்தின் வகிபாகத்தினைச் சுருக்கமாக விளக்குக. **(10 புள்ளிகள்)**

3. "கல்வித்தலைவர்கள் மற்றும் முகாமையாளர் தங்களது வகிபாகத்தில் முரண்பாட்டு – மீள்தன்மைக் கலாசாரத்தினை கட்டியெழுப்புதல் மிகவும் முக்கியமானதாகும்."

**i.** முரண்பாட்டு முகாமைத்துவம் என்பதனால் நீங்கள் கருதுவது யாது? சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

**ii.** பாடசாலை தலைவர் ஒருவருக்கு ஏன் முரண்பாட்டு முகாமைத்துவ திறன்கள் மிகவும் முக்கியமானது, என பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

**iii.** Thomas – Kilmann Conflict Management Model (TKI) அனது ஒரு தனியாள் ஒரு முரண்பாட்டு சூழ்நிலைக்கு எவ்வாறு துலங்கல் காட்டுகிறார் என்பதை அளவிடுவதற்கு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு சட்டமாகும். மேற்படி சட்டகத்தினை உங்களுடைய பாடசாலை அல்லது நிறுவனத்தில் தெரிவு செய்யப்பட்டதொரு ஆளிடைசார் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் எவ்வாறு பிரயோகிப்பீர்கள் என உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. **(10 புள்ளிகள்)**

4. "ஒழுங்கமைப்பு கலாசாரமானது ஊழியர் ஈடுபாடு, பெறுபேறு, தரித்திருத்தல், நடத்தைகளை மெருகூட்டுதல், தீர்மானங்கள் மேற்கொள்வதற்கு வழிகாட்டுதல் மற்றும் பொதுவான இலக்கை நோக்கி அனைவரும் செயற்படல் என்பவற்றுக்கு அடிப்படையாகும்."

   **i.** ஏற்றுக்கொள்ளபட்ட வரைவிலக்கணம் ஒன்றினை வழங்கி, ஒழுங்கமைப்பு கலாசாரம் எனும் எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

   **ii.** ஒழுங்கமைப்புக் கலாசாரத்தின் **நான்கு (04)** வகைகளை இனங்கண்டு, அவை ஒவ்வொன்றையும் உங்களுடைய பாடசாலை சூழமைவுடன் தொடர்புபட்ட பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

   **iii.** ஒரு அதிபர் அல்லது கல்வி நிறுவனமொன்றின் தலைவர் என்ற வகையில் உங்களுடைய பாடசாலையில் அல்லது கல்வி நிறுவனத்தில் உடன்பாடான ஒழுங்கமைப்புக் கலாசாரத்தினை கட்டியெழுப்புவதற்கு நடைமுறைப்படுத்தப்படக்கூடிய **ஐந்து (05)** நடவடிக்கைகளை விபரிக்குக. **(10 புள்ளிகள்)**

5. "21ஆம் நூற்றாண்டு கல்வித் தலைவர்கள் சிக்கல் நிறைந்த முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு செயற்றிட்ட முகாமைத்துவ திறன்கள் முக்கியமானவை."

   **i.** செயற்றிட்டம் மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவம் என்பதனால் நீங்கள் கருதுவது யாது? **(07 புள்ளிகள்)**

   **ii.** வெளியீட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்டம் (Outcome Based Project) ஒன்றினை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படும் **நான்கு (04)** ஆளிடைத் தொடர்புசார் திறன்களைச் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

   **iii.** மாணவர்களின் விஞ்ஞானப் பாட அடைவினை முன்னேற்றுவதற்காக பாடசாலை மட்டத்திலான அபிவிருத்தி செயற்றிட்டம் ஒன்றினை ஆரம்பிக்குமாறு ஒரு அரசாங்க கல்வி அதிகாரி உங்களிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளார். நீங்கள் ஒரு செயற்றிட்ட முகாமையாளர் என்ற வகையில், இக்குறிப்பிட்ட செயற்றிட்டத்தை எவ்வாறு ஆரம்பித்து முன்னெடுப்பீர்கள் எனவும் செயற்றிட்டத்தின் மூன்று பரிமாணங்களை (நேரம், தரம் மற்றும் செலவு) வெற்றிகரமாக செயற்றிட்டத்தின் போது எவ்வாறு முகாமைத்துவம் செய்வீர்கள் எனவும் படிமுறை ஒழுங்கில் சுருக்கமாக விளக்குக. **(10 புள்ளிகள்)**

6. "ஒழுங்மைப்பு மாற்றம் ஒழுங்கமைப்புகளின் வினைத்திறன், புத்தாக்கம், ஊழியர் ஈடுபாடு மற்றும் ஒட்டுமொத்தமான பெறுபேறுகள் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்லும்."

   **i.** மாற்றத்தினை முகாமை செய்தல் என்பதனால் கருதப்படுவது யாது எனச் சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

   **ii.** "மாற்றத்திற்கான இறுக்கநிலை என்பது குறிப்பாக ஒழுங்கமைப்புகளில் பொதுவானதொரு மனித பிரதி செயலாகும்." மாற்றத்திற்கான இறுக்கமான நிலைகளுக்கான பொதுவான **நான்கு (04)** காரணங்களைப் பட்டியற்படுத்தி, அவற்றை இழிவளவாக்குவதற்கு அல்லது அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கு ஒரு கல்வி முகாமையாளர் பின்பற்றக்கூடிய பொருத்தமான உத்திகளையும் பரிந்துரைக்குக. **(08 புள்ளிகள்)**

   **iii.** திருமதி சமுத்ரா புதிதாக ABC எனும் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட அதிபர் ஆவார். அவர் பாடசாலையின் தற்போதைய கற்பித்தல் கற்றல் செயன்முறை தொடர்பில் மகிழ்ச்சியற்ற நிலையில் இருப்பதோடு ஒரு புத்தாக்கமுள்ள அணுகுமுறையை மாணவர் மையக் அணுகுமுறையாக மாற்றியமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என நினைக்கிறார். நீங்கள் திருமதி. சமுத்ராவாக இருப்பின் கேர்ட் லெவினின் மாற்ற முகாமைத்துவ மாதிரியை விரும்பத்தகுந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எவ்வாறு பிரயோகிப்பீர்கள். **(10 புள்ளிகள்)**

- *பதிப்புரிமை பெற்றது* -